Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 72 | எனக்கு இரங்கும் கர்த்தாவே, நான் நெருக்கப்படுகிறேன்; சங்.31:9. | ஜனவரி 2026 | No.1

பரிசுத்தத்தை தொடருதல்

Pursuing Holiness

Rich Carmicheal

"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தமாயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" 1பேது.1:15,16.

"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" எபி.12:14.

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதிக்கிறார். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப் பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக் குள் நம்மைத் தெரிந்து கொண்டார்" எபேசி.5:25-27.

"நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பும், மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து, இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தவான்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" 1தெச.3:12,13.

"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்"2 கொரி.7:1.

நிச்சயமாகவே பரிசுத்தம் தேவ ஜனமாகிய நமக்கு அவசியம். அதற்காக அவர் நம்மை அழைக்கிறார். கிறிஸ்து தம்மை நமக்கு அளித்ததும் அதற்காகவே. நாம் பரிசுத்தத்தைத் தொடருவதற்கான காரணம் என்னவெனில் பரிசுத்தமில் லாமல் எவரும் கர்த்தரை தரிசிக்கவே முடியாது!

பரிசுத்தத்தின் அம்சங்கள்

பரிசுத்தம் நம்மை கர்த்தருக் காகவும் அவரது நோக்கங்களுக்காகவும், முழுவதும் அர்ப்பணித்து அவருடைய தன்மையால் நிரம்பியிருக்க ஞாபகப் படுத்துகிறது. நாம் "அந்தப்படி முந்தின நடக்கைக் குரியமாசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொள் ளுங்கள்" எபே.4:22-24. J.C. ரைஸ் எழுதுவது போல "பரிசுத்தமுள்ள ஒருவன் அறியப் பட்டுள்ள அனைத்து பாவங்களையும் விலக்க முயற்சிப்பதுடன். அறிந்திருக்கும் அனைத்துக் கட்டளைகளையும் கைக்கொள்ள முயற்சிப்பான். தேவனுக்கு நேராக ஒரு திடமான மனதும். அவரது சித்தம் செய்யும் ஆவலும் உலகத்தை துக்கப்படுத்துவதை விட தேவனை துக்கப்படுத்து வதால் அதிக பயமும். அவரது வழிகளி லெல்லாம் அன்பும் அவனிடம் காணப்படும்".

*சாமுவேல் L. பிராங்கில் (1860-1936) என்பவர் '**பரிசுத்தத்திற்கான வழி**' என்ற தமது நூலில் "...ஒரு பரிசுத்த நபர் தேவனைப் போன்றவர்" என்று எழுதுகிறார். அவன் அவரைப் போல முடிவற்றவன் அல்ல, எல்லாவற்றையும் அறிந்தவனுமல்ல. தேவனைப் போலவே சகல வல்லமையும் ஞானமும் அவனிடத்தில் இல்லை. ஆனால் அவரது தன்மையில் அவன் தேவனைப் போன்றவன். அவன் நல்ல வனும், சுத்தமானவனும், அன்புள்ள வனும், தேவன் செல்லும் வழியிலிருப்ப வனுமாயிருக்கிறான். எனவே பரிசுத்தம் தேவனோடு ஒத்த பண்பு. இயேசு கிறிஸ்துவில் அவர் வெளிப்பட்டது போல தேவனுக்குச் சமமானது.*

மேலும் அவர் குறிப்பிடும் போது பரிசுத்தத்தைக் குறித்து இயேசு வைப் போல நாமும் இவ்வுலகில் வாழு கிறவர்களும், எல்லாநற்கிரியைகளையும் செய்கிறவர்களாக இருந்தாலும், இந்த உலகத்திற்குரியவர்களல்ல யோ.17:16-18. "...அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்" 1யோ.3:3. தேவனிடம் காணப்பிக்கும் அன்பில் நாமும் கூட அப்படியிருக்க வேண்டும். எல்லா மனிதரிடமும், நம் எதிரிகளிடம் கூட அன்பாயிருக்க வேண்டும். குறிப்பாக கர்த்தருக்குள் அன்பான சகோதர சகோதரிகளிடம் அன்பாயிருக்க வேண்டும் யோ.13:14. தேவன் நம்மில் வாசமாயிருக்கிறபடியால் நாம் இயேசுவைப் போல் வாழ்வது அவசியம் யோ.14:11,20.

"நாம் உலகத்திலிருந்து வேறுபட்டு வாழ்வதன் மூலம் பரிசுத்தமாகவும் அன்புடனும், ஆவியின் நிறைவிலும் இயேசுவைப் போல வாழலாம். இதுவே பரிசுத்த வாழ்வு."

பரிசுத்த வாழ்வின் ஊற்றும் உறைவிடமும்

*தேவனுடைய பிரசன்னம், வல்லமை மற்றும் இரக்கம் ஆகிய வற்றின் மூலமாக மட்டும் இத்தகைய அன்பு மற்றும் நிறைவான வாழ்வை நாம் பெறமுடியும். "**தேவன் ஒருவர் மட்டுமே பரிசுத்த வாழ்வுக்கு ஊற்றும் உறைவிடமும் ஆனவர்**". பரிசுத்தம் கிறிஸ்துவிடமிருந்து வருகிறது. அது அவரோடுள்ள பலத்த ஐக்கியத்தின் விளைவாகும். அது மெய்யான திராட்சச் செடியின் கொடியாக வாழ்வதின் பலனாகும் என்று ரைஸ் எழுதுகிறார்.*

இவ்வாறு நமது ஜெபங்கள் கர்த்தர் நம்மை அவரால் நிரப்பி, அவரது பங்காளிகளாக செயல்பட பரிசுத்தத்தில் தொடர ஜெபிப்போம். கிறிஸ்துவே நமது நீதியும், சுத்திகரிப்பும், மீட்புமானவர் 1கொரி.1:30. அவரது குருதி நமது அனைத்துப் பாவங்களிலுமிருந்தும் நம்மை கழுவட்டும் எபி.13:12; 1யோ.1:7. அவரது வார்த்தையால் சுத்திகரிக்கப்பட்டு கழுவப்படுவோம் யோ.17:17; எபே.5:26.

அவருடைய நாம மகிமைக்காக முற்றிலும் வாழ நாம் பரிசுத்த வாழ்வைத் தொடரும் போது அவரே நமக்கு உதவி செய்வாராக 1தெச.5:23; 1பேது.2:9.

உள்ளே...

முட்செடியின் நடுவிலிருந்து உண்டான

அக்கினி

உண்மையான அன்பு – Real love

R.A.Torrey

அன்பு என்றால் என்ன? மற்றவர்களுடைய நலனுக்காக பற்றி எரிந்து, நம்மை மூழ்கடிக்கும் ஆசை என்று விளக்கலாம். உண்மையான அன்பு சுயநலமற்றது. அது தன் சொந்த நலனைப் பாராமல் அன்பு கூரப்படுகிற நபரது நலனையே தேடுகிறது. இதுவே தேவன் உலகத்தில் காண்பித்த அன்பின் தன்மை. அவர் உலகத்தில் அன்பு கூர்ந்தார், உண்மையாகவே அன்பு கூர்ந்தார்.

அவர் உலகத்தைக் கண்ணோக்கிப் பார்த்தார். அவர் வாழ்ந்து கொண்டிருக்கிற அனைத்து மக்களையும் கவனிக்கிறார். முக்காலத்திலும் அவர் நேசிக்கிறவர். அவர் முழு மனதோடும் முடிவில்லாத அன்புடனும் அவர்களுக்கு நன்மை செய்யவும், அவர்களை ஆசீர்வதிக்கவும் விரும்புகிறார். உலகத்தை ஆசீர்வதிக்க அவர் எந்தக் கிரயமும் செலுத்த ஆசையுள்ளவர்.

"நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" 1யோ.4:10.

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P. Mony

2 நாளாகமம் 7:14

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.

வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர் உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது சங்கீதம் 65:11.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2026 ஜனவரி மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

ஆண்டவருடைய பிள்ளைகளாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது அன்பான '**புத்தாண்டு வாழ்த்துக்கள்**' தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ***கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார். நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்*** சங்கீதம் 128:5.

2025 -ம் ஆண்டு முழுவதும் தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்கள் அனுப்பிய அன்பின் காணிக்கைகள் எல்லாவற்றிற்காகவும் நாங்கள் கர்த்தரை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. இதைக் குறித்து 2025 மேய் மாத தூதனில் நான் எழுதினதை திரும்பவும், அப்படியே அச்சிடுகிறேன்:

ஜெபக்குறிப்பு 1. ***உங்களுக்காக***

வாசகர் அனைவருக்காகவும் தினந்தோறும் ஜெபிக்கிறேன். நிர்வாக வசதிக்காக, மிக நீண்ட வருடங்களாக மாதந்தோறும் காணிக்கை அனுப்புகிற தேவனுடைய பிள்ளைகளுக்காக தனியாக டயரி பராமரித்து வருகிறேன். பிற்பாடு, ஆண்டுதோறும் காணிக்கை அனுப்புகிற ஆண்டவருடைய பிள்ளைகளுக்காகவும், மேலும் காணிக்கை அனுப்புகிற அனைத்து வாசகருக்காகவும் புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு, உங்கள் அன்பான காணிக்கைகள் பதிவு செய்யப்படுகிறது. ஆகையால் ***உங்களை நினைத்து*** தினந்தோறும் ஜெபிப்பது எனக்கு இலகுவாயிருக்கிறது.

நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி,

உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி,

நான் ***உங்களை நினைக்கிற*** பொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன் பிலிப்பியர் 1:4-6.

★ ★ ★

1991 முதல் தூதன் உதவி ஆசிரியராகவும், 1999 முதல் ஆசிரியராகவும் இருக்கிற அடியேன், தேவ கிருபையால் இந்நாள்வரை **நீங்கள் அனுப்புகிற காணிக்கைகளை கையொப்பம் இட்டு பெற்று வருகிறேன்.** வங்கி வழியாக நீங்கள் காணிக்கை அனுப்பும்போதும் எனது மொபைல் போனில் செய்தி (Message) வருகிறது.

2026 **இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார் மாற்கு 9:23.**

வருகையின் தூதன்
ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0438700**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

வாசகர் கடிதம் 24-11-25
காஞ்சீபுரம்

கர்த்தருக்குள் பிரியமான பத்திரிகை ஆசிரியர் வெஸ்லி தேவதாசன் ஐயா அவர்களுக்கும், தங்களுடன் பணியாற்றும் சக ஊழியர்களுக்கு ஸ்தோத்திரம் செய்து எழுதும் நிருபம்.

தங்கள் பத்திரிகை வருகையின் தூதன் நான் தொடர்ந்து 50 ஆண்டுகளாய் தொடர்பு கொண்டு வாழ்ந்து வருகிறேன். எனக்கு ஒரு மாதம் கூட நிலுவையில் இல்லை. என் வீடு தேடி வருவதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். உங்கள் ஜெபக்குழுவினருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டவர் அருளால் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு சுகம் பெற்று வருகிறேன். எனக்கு 80 வயதாகியும் எந்த நேரத்திலும் என் தேவனை நினையாத நேரமில்லை.

காணிக்கை ரூபாய் 500 அனுப்புகிறேன், பெற்றுக் கொண்டு ஊழியத்தில் நீங்கள் இன்னும் பெலப்பட இறைவனை வேண்டுகிறேன்.

சகோதரி **G.V.**

இந்தியா இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்

(மாதம் முழுவதும் 31 நாட்களும் ஜெபிப்பதற்காக **ஜெப கையேடு** அச்சிட்டு வருகிறோம். அதில் அச்சிடப்பட்டுள்ள 31 ஜெபக் குறிப்புகளை ஒவ்வொரு மாதமும் வெளியிடுகிறோம்)

தேதி 1

ஆந்திரப்பிரதேசம் (Andhra Pradesh)

ஜெபியுங்கள்: முதலமைச்சர், அமைச்சர்களுக்காக, M.P., M.L.A., I.A.S., I.P.S., அதிகாரிகளுக்காக, நீதித்துறை, காவல்துறை, வழக்குரைஞர்களுக்காக, ஆளுநர், மாவட்ட ஆட்சியர்களுக்காக.

2011 கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை : 8,45,80,777
2025 கணிக்கப்பட்ட மக்கள் தொகை : 9.57 கோடி

மாவட்டங்கள் : 26
கிராமங்கள் : 27,800

2011 கிறிஸ்தவர்கள் : 1.34 %
2025 கிறிஸ்தவர்கள் : 1.51 %

மக்கள் இனங்கள் : பிராமணர், பனியா, சோனார், தெலகா, அஹிர், ரெட்டி, கம்மா, கப்பூ, கொமட்டி

ஜெபக்குறிப்புகள்:

1. அரசாங்கத்திற்கும், நக்ஸல்பாரிகளுக்கும் நடைபெற்ற மோதலில் (நவம்பர் 2025) முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டுவிட்டனர். எனவே 31 மார்ச் 2026க்குள் நக்ஸல்களை முற்றிலும் ஒழிக்க (Zero tolerence) மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இவர்கள் சரணடைய பேச்சு வார்த்தைகள் முலம் சமாதானம் நடைபெற ஜெபிப்போம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

2. பல மாவட்டங்கள் நக்ஸல்பாரிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளது. தற்போது 6 முதல் 3 மாவட்டங்களில் மட்டுமே அவர்களின் செயல்பாடுகள் உள்ளது. 2015 - 2025 வரை 10,000க்கும் மேற்பட்டவர்கள் சரணடைந்துள்ளனர். மற்றவர்களும் சரணடைய மறுவாழ்வு பெற ஜெபிப் போம்.

3. கிறிஸ்தவ ஊழியர்களின் பாதுகாப் பிற்காக, கிறிஸ்தவ சபைகளுக்குள் ஒற்றுமை நிலவ, கிறிஸ்தவர்கள் அநேகருக்கு ஆசீர்வாதமாயிருந்து, கிறிஸ்துவை தங்கள் வாழ்வில் பிரதி பலிக்க ஜெபிப்போம்.

விசேஷ ஜெபக்குறிப்பு

ஆண் பெண் இருபாலரிடையே இப்போது மிக வேகமாக பரவிவரும் பாவம் ஹோமோசெக்ஸ் - லெஸ்பியன் செக்ஸ் என்பது ஆகும். திருநங்கைகள், ஆண்புணர்ச்சிகாரர்கள், பெண் புணர்ச்சி காரர்கள் ஆகியவர்கள் (Gayism - Lesbian-ism - Transgender) தங்களை இறைவனின் படைப்பு என்று இவர்கள் இருவரும் (மத்.19:12 வசனத்தைக் காட்டி) நம்பு கிறார்கள். இப்படிப்பட்டவர்களை மக்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கக்கூடாது என்கிறார்கள். திருநங்கைகள், ஆண் புணர்ச்சிக்காரர்கள், பெண் புணர்ச்சி பாவம் செய்யும் பெண்கள் ஆகியவர்கள் (Gayism-Lesbianism-Transgender) பிறக்கும் போதே அப்படிப்பட்ட பால் உணர்ச்சி உள்ளவர்களாகவே பிறக்கி றார்கள் என்று இவர்கள் நினைக்கிறார்கள், உலகமும் அதை நம்புகிறது.

(Natural Use - இயல்பான முறை, Against Natural Use - இயல்புக்கு மாறாக) "அந்தப்படியே அவர்களுடைய பெண் கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றி னார்கள். அப்படியே ஆண்களும் ..... ஆணோடே + ஆண் அவலட்சண மானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத் திற்குத் தகுதியான பலனைத் தங்க ளுக்குள் அடைந்தார்கள்" என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது ரோமர் 1:26-32.

(லேவி. 18:22,23; 20:13; 1கொரி. 6:9, 10; 1தீமோ. 1:9-11 பார்க்க)

வருகையின் தூதன்

ஒஜப நேரம்

பகல் 1.00 முதல் 2.00 வரை

2026 தமிழ்நாடு தேர்தலுக்காக

ஜெபிங்கள்

அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களின் விஷயத்தில் நீடிய பொறுமை யுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?

சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று அவர்களுக்குச் சொல்லுகிறேன் லூக்கா 18:7,8.

சிறப்புச் செய்தி

7 அக்கினி

பூமியின் மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்பு கிறேன் லூக்கா 12:49.

I. முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி

மோசே மீதியான் தேசத்து ஆசாரி யனாயிருந்த தன் மாமனாகிய எத்தி ரோவின் ஆடுகளை மேய்த்து வந்தான். அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின் புறத்திலே ஓட்டி, தேவ பர்வதமாகிய ஓரேப் மட்டும் வந்தான்.

அங்கே கர்த்தருடைய தூதனா னவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப் பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்து போகாமல் இருந்தது.

அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்து போகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புத காட்சியைப் பார்ப்பேன் என்றான்.

அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடி யின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட் டார். அவன்: இதோ, அடியேன் என்றான்.

அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச் சேராயாக; **உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்** யாத். 3:1-5.

ஸ்தேவான் பிரசங்கித்ததை கேளுங்கள்:

1 அக்காலத்திலே மோசே பிறந்து, திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான்.

அவன் வெளியே போட்டுவிடப் பட்டபோது, பார்வோனுடைய குமா ரத்தி அவனை எடுத்துத் தனக்குப் பிள்ளை யாக வளர்த்தாள்.

மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக் கிலும் செய்கையிலும் வல்லவனானான்.

அவனுக்கு **நாற்பது** வயதான போது, இஸ்ரவேல் புத்திரராகிய தன்னு டைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண் டாயிற்று.

அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படு கிறதை அவன் கண்டு, அவனுக்குத் துணை நின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ்செய்தான்.

தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவா ரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறிய வில்லை.

மறுநாளிலே சண்டை பண்ணிக் கொண்டிருக்கிற இரண்டு பேருக்கு அவன் எதிர்பட்டு: மனுஷரே, நீங்கள் சகோதரரா யிருக்கிறீர்கள்; ஒருவருக்கொருவர் அநி யாயஞ் செய்கிறதென்ன என்று, அவர் களைச்சமாதானப்படுத்தும்படி பேசினான்.

பிறனுக்கு அநியாயஞ்செய்தவன் அவனைப் பிடித்துத்தள்ளி: எங்கள் மேல் அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்?

நேற்று நீ அந்த எகிப்தியனைக் கொன்றது போல என்னையும் கொன்று போட மனதாயிருக்கிறாயோ என்றான்.

இந்த வார்த்தையினிமித்தம் மோசே ஓடிப்போய், மீதியான்தேசத்திலே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்; அங்கே இருக்கும்போது அவனுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள் அப்.7:20-29.

2 **நாற்பது வருஷம்** சென்றபின்பு, சீனாய் மலையின் வனாந்தரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடி எரிகிற அக்கினி ஜுவாலையிலே அவனுக்குத் தரிசனமானார்.

மோசே அந்தத் தரிசனத்தைக் கண்டு, அதிசயப்பட்டு, அதை உற்றுப் பார்க்கும்படி சமீபித்துவருகையில்:

நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்று கர்த்தர் திருவுளம் பற்றின சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. அப்பொழுது மோசே நடுக்கமடைந்து, உற்றுப்பார்க்கத் துணி யாமலிருந்தான்.

பின்னும் கர்த்தர் அவனை நோக்கி: உன் பாதங்களிலிருக்கிற பாதரட் சைகளைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமியாயிருக்கிறது.

எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, அவர் களை விடுவிக்கும்படி இறங்கினேன்; ஆகையால், நீ வா, நான் உன்னை எகிப்திற்கு அனுப்புவேன் என்றார்.

உன்னை அதிகாரியாகவும் நியா யாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார் என்று சொல்லி அவர்கள் மறுதலித் திருந்த இந்த மோசேயைத்தானே தேவன், முட்செடியில் அவனுக்குத் தரிசனமான தூதனாலே, தலைவனாகவும் மீட்ப ராகவும் அனுப்பினார் அப்.7:30-35.

3 இவனே அவர்களை அங்கே யிருந்து அழைத்துக் கொண்டு வந்து, எகிப்து தேசத்திலேயும் சிவந்த சமுத்திரத் திலேயும், **நாற்பது வருஷ காலமாய்** வனாந் தரத்திலேயும், அற்புதங்களையும் அடை யாளங்களையும் செய்தான் அப்.7:36.

கர்த்தரின் தாசனாகிய மோசே மரித்தான்

அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப் பேன் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக் கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான். இதை உன் கண் காணும்படி செய்தேன்; ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்து போவதில்லை என்றார்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின் படியே மரித்தான்.

அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம் பண்ணினார். இந்நாள் வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான்.

மோசே மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருந்தான்; அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை உபாகமம் 34:4-7.

ஆசீர்வாதம்

இஸ்ரவேலே, நீ பாக்கியவான்; கர்த்தரால் ரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன்யார்? உனக்குச் சகாயஞ் செய்யும் கேடகமும் அவரே; உபா.33:29.

வாழ்த்து

உங்களுக்கு எங்கள் அன்பான, ஆசீர்வாதமான புதுவருட வாழ்த்துக்கள்!

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

W.சாமுவேல் ஃபின்னி
Mobile: 95432 21008
Whatsapp: 94897 40295
e-mail: varukayinthoothan@hotmail.com

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள் 1தெச.5:25.

சபையில் நடனம் தேவையா?

பழைய ஏற்பாட்டின் கட்டளைகளில் நடனம் என்பது தேவ கட்டளைகள் அல்ல. மார்க்க சம்மந்தமான காரியங்களில் மக்கள் தாங்களாகவே நடனம் ஆடினார்கள். தேவனாகிய கர்த்தர் அதனை ஆதரித்தோ, எதிர்த்தோ எதுவும் சொன்னதாக நிகழ்வுகள் இல்லை!

ஆயினும் நடனங்களுக்குப் பிந்தைய சம்பவங்கள் கடும் அதிர்ச்சிகரமாக இருந்தன. இவைகள், மனிதர் தாங்களாகவே உணர்ந்து கொள்ளட்டும் என தேவன் விட்டுவிட்டதைப் போல உள்ளது. புதிய ஏற்பாட்டுப் பகுதியில் **ஏரோதியாளின்** குமாரத்தி நடனமாடி அதற்கு பரிசாக **யோவான் ஸ்நானனின்** தலையை சிரச்சேதம் பண்ணச்செய்தாள் மத். 14:6.

ஆண்டவராகிய இயேசுவின் உவமையிலும் கூட நடனம் என்பது சொல்லப்பட்டு உள்ளது.

அவனுடைய மூத்த குமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீதவாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு (லூக்கா 15:25). இப்படி சில சூழ் நிலைகளில் நடனகாரியங்கள் வெளிப் படுத்தப்பட்டுள்ளன. ஆனால், தேவ காரியங்களில் எந்த ஒரு நடனமும் ஆண்டவராகிய இயேசுவின் வாழ் விலோ, அப்போஸ்தலர்களின் ஊழியத் திலோ இருந்ததாக எந்தவொரு ஆதாரமும் இல்லை.

மனிதர்கள் தங்கள் இச்சைக்காகக் கூட ஊழியத்தைப் பயன்படுத்தக் கூடும்! நாம் மார்டன் உலகத்தில் இருக்கிறோம். வாழ்வதும் அப்படியே! புகைக்கு நடுவே நடனம், **கலர் லைட்**, அருவருக்கத் தக்க ஆட்டம், **சினிமா** பாணியில் இசைப் பாடல்கள் இவையெல்லாம் தேவசித்தம் அல்ல! அப்படி இருந்திருந்தால் அப்போஸ்தலர்கள் எத்தனை இடங் களில் ஆட்டம் போட்டு இருப்பார்கள்? ஆண்டவரும் ஆடிப்பாடியிருப்பாரே! அப்போஸ்தல உபதேசத்துக்கும் ஆட்டத் துக்கும் துளியும் சம்மந்தமே இல்லை! அர்ப்பணிப்புதான் ஆராதனை, ஆட்டம், பாட்டம் அல்லவென்று, ஆண்டவ ராகிய இயேசுவும் அப்போஸ்தலர்களும் ஜீவனைக் கொடுத்தல்லவா நிரூபித் தார்கள்! **ஆன்லைனில்** ஆட்டம் போட்டு **லைக்குகளும்**, **ஷேர்**களும் பெற்று பிரபல மாகிப் பெருவாழ்வு வாழ்வது தேவனுக்கு உகந்ததல்ல.

தேவ பிள்ளைகளை அவர் களுக்கு தெரியாமலே, சத்தியத்தைவிட்டு விலகச் செய்கிற, கள்ள உபதேசங்கள், ***கலர்*** புகை நடனங்களாக உலாவிக் கொண்டிருக்கிற காலமிது. ஊழியர்களை ஆதர்ஷ புருஷர்களாக, விருப்பக் கதா நாயகர்களாகக் கொண்டாடும் கூட்டமும் உண்டு! அழகாய்த் தென்படும் உலகக் காரியங்கள் தேவனுக்கு அருவருப்பாய் தென்படலாம். சிறு அசைவுகளாகத் தொடங்குகிற ஆட்டம், **சைக்காலஜிகலாக** ஒருவரின் உடலில் சிறு பரவசத்தை ஏற்படுத்துவது உண்மை. அதனை வைத்துப் பிழைப்போட்டுவது, அகாசய சூரர்களின் திட்டம்! கிறிஸ்தவரல்லாத அனேக இனங்களில் புறமதஸ்தர் களுக்கான ஆராதனைகளில் நிச்சயம் ஆட்டங்கள் உண்டு! அப்படிப்பட்ட பின்புலத்திலிருந்து கிறிஸ்தவத்துக்கு வருவோர், இப்படிப்பட்ட நிகழ்வுகளால், திரும்பவும் ஆடும்படி சூழ்நிலைகள் வரும்போது, நடனம் பண்ணுவது இன்னும் எளிதாகி விடுகிறது!! அப்படிச் செய்யப் பண்ணுவது பாவம்! நடன ஆட்டங்களுக்குப் பின்னால் விபசாரத்தின் ஆவியும், வேசித்தனத்தின் ஆவியும் மிக வல்லமையாய் செயல்படுகின்றன. கர்த்தரின் வருகை தாமதித்தால், இன்னும் பல கதைகள் வெளிவரலாம். நவீன ஊழியர்கள், பெரும்பாலும் வாலிபரைக் குறிவைத்தே காரியங்களை நடத்து கிறார்கள். பொல்லாங்கானவைகளுக்கு விலகியோடுங்கள்... நடனத்தை நியாயப் படுத்துவதோ, நடனமாடுவோரைக்காயப் படுத்துவதோ அடியேனின் நோக்கமல்ல..

நாம் சத்தியத்தின்படி சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம் அல்லவா? மெல்லிய இசையோடு பாடி தேவனை ஆராதியுங்கள். சில கிறிஸ்தவ வாலிப பெண் பிள்ளைகள்கூட சினிமா ஸ்டைலில் நடனம் ஆடுகின்றனர். எவ்வளவு அருவருப்பு. எங்கள் சபையில் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் 5 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளை நடனம் ஆட அனுமதிப்பதில்லை. உங்கள் இருதயம் பரிசுத்தமாய் அர்ப்பணிக்கப்படட்டும். அழியப்போகிற உடலை ஆட்டிப் பிரயோசனம் இல்லை! அழியாத ஆத்துமா சத்தியத்தால் கட்டப்பட்டு ஆடாமல் இருக்கட்டும்! நாம் சேரப் போவது அசையாத ராஜ்ஜியம்! ஆமென்!

புது சிருஷ்டி, The Church of God Voice

ஒரு பரிசுத்த வாழ்வின் குணாதிசயங்கள்

Characteristics of a Holy Life

J.C.Ryle (1816 - 1900)

"....பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்தில்லையே" எபி.12:14.

வேதவாக்கியம் அவரது சிந்தை யைக் குறித்து என்ன கூறுகிறதோ அதன்படி அவரது சிந்தையுடன் ஒரே மனதுடன் இருக்கும் பழக்கமே பரிசுத்தம். அதாவது தேவனுடைய தீர்ப்பை ஒத்துக் கொள்ள வேண்டும். அவர் வெறுப்பதை நாமும் வெறுக்க வேண்டும். அவரது வார்த்தையின் அளவுப்படி இவ்வுலகில் எல்லாவற்றையும் அளக்க வேண்டும்.

யாதொருவன் மிகவும் முற்றிலு மாக தேவனுக்கு உடன்படுகிறானோ அவனே மிக பரிசுத்த மனிதன்.

ஒரு பரிசுத்தவான் அறிந்த பாவங் களை உதறி, அறிந்திருக்கும் அனைத்து கட்டளைகளையும் கைக்கொள்ள முயற்சி செய்வான்:- அவன் தேவனுக்கு நேராகத் திரும்பிய உறுதியான உள்ளமும், அவரது சித்தம் செய்ய ஆவலுள்ள இருதயமும் உலகத்தைப் பிரியப்படுத்தா விட்டாலும் தேவனைதுக்கப்படுத்தாமல் அவரது வழிகளையெல்லாம் விரும்பு வான்.

"உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிருக்கிறேன்" (ரோ. 7:22) என்றபடி பரிசுத்தவான் உணருவான். தாவீதும் இப்படி உணர்ந்து: "எல்லா வற்றைப் பற்றியும் நீர் அருளின எல்லாக் கட்டளைகளும் செம்மையென்று எண்ணி சகல பொய் வழிகளையும் வெறுக்கிறேன்" (சங்.119:128) என்று குறிப்பிடுகிறார்.

ஒரு பரிசுத்தவான் இயேசு கிறிஸ்துவைப்போல வாழ முயற்சிப் பான்:- விசுவாச வாழ்க்கை வாழுவது மட்டுமல்ல, அவரிடமிருந்து அனு தினமும் சமாதானத்தையும் பெலனை யும் பெற்றுக்கொள்வதோடு அவரது சிந்தையைப் பெற்றுக்கொள்ள உழைத்து, அவரது சாயலுக்கு ஒப்பாக மாற விரும்பு வான் ரோம.8:29. அவனது நோக்கம் மற்றவர்களுக்கு கிறிஸ்து மன்னித்தது போல மன்னிப்பதும், சுயநலமற்றிருப் பதும், கிறிஸ்துவைப்போல தன்னைப் பிரியப்படுத்தாமலிருப்பதும், அன்பில் நடப்பதும், தாழ்மையுடன் வாழும் சிந்தையுடனிருப்பதும் போன்ற கிறிஸ்து வின் பண்புகளை கடைப்பிடிப்பதாகும்.

கிறிஸ்து சத்தியத்திற்கு ஒரு உத்தம சாட்சி என்றும், அவர் தான் தனது சொந்த சித்தத்தை நிறைவேற்ற வர வில்லை; ஆனால் தனது உணவும், பானமும் பிதாவின் சித்தம் செய்வதே எனக்கூறினார். தொடர்ந்து பிறருக்கு ஊழியம் செய்ய தன்னை வெறுப்பதாகக் கூறிய அவர், தமக்கு எதிராகக் கூறப்பட்ட

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவமதிப்புகளை பொறுமையோடும் சாந்தத்தோடும் சகித்தார். அரசர்களை எண்ணிப் பார்ப்பதைவிட தெய்வீக ஏழை மனிதரை நினைத்து அன்பும் உருக்கமும் நிறைந்தவராய் பாவிகளை ஏற்றுக்கொண்டார். ஆனால் பாவத்தைக் கண்டிப்பதில் தைரியமாக இருந்தார். மனிதருடைய புகழ்ச்சியை விரும்பாமல் நன்மை செய்து சுற்றி நடந்தார். உலக மனிதரை விட்டுப்பிரிந்து, தொடர்பாக ஜெபித்தார். தேவபணி நிறைவேற்றப்பட தனது நெருங்கிய உறவினரும் தடையாயிருக்க அவர் அனுமதிக்கவில்லை.

ஒரு பரிசுத்தவான் இவைகளையெல்லாம் ஞாபகப்படுத்த முயற்சிப்பான். இந்த வசனங்களைக் கொண்டு தங்கள் வாழ்க்கைப் பாதைதனை வடிவமைக்க முயற்சி எடுப்பான். யோவான் சொன்ன வார்த்தைகளாகிய "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்" *(1யோ. 2:6)* என்பதை மறக்கக் கூடாது. அதுபோல பேதுரு கூறியபடி "... கிறிஸ்துவும் உங்களுக்காக நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார்" *1பேதுரு 2:21.* கிறிஸ்துவை **'எல்லாவற்றிற்கும் எல்லாமாக'** அதாவது இரட்சிப்புக்கும் மாதிரிக்கும் ஏற்றுக் கொண்டவர்கள் சந்தோஷமாயிருப்பார்கள். அதிகமான சமயமும், பாதுகாக்கப்பட்டு பாவமும் தடுக்கப்படும். அதற்காக மக்கள் அடிக்கடி தங்களைத் தாங்களே கேட்க வேண்டிய கேள்வி "**எனது இடத்தில் இயேசு இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்? அல்லது சொல்லியிருப்பார்?**"

ஒரு பரிசுத்தவான் சாந்தம், பொறுமை, சாதுவான தன்மை, நாவை அடக்குதல் போன்ற தன்மைகளைப் பின்பற்றுவான். அவன் அதிகமதிகமாய் சகிப்பதால் தனக்கு உரிமை இருந்தாலும் பேசுவதில் தாமதமாயிருப்பான். தாவீதின் வாழ்க்கையில் இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு உண்டு. சீமேயி என்பவன் அவனை தூஷித்தபோது சொன்ன பதிலை *2 சாமு.16:10* மற்றும் ஆரோன் மற்றும் மிரியாம் மோசேக்கு எதிராகப் பேசினபோது மோசே சொன்ன பதிலையும் *எண்.12:3* வசனங்களில் வாசிக்கிறோம்.

ஒரு பரிசுத்தவான் நிதானத்தையும் சுயஒறுப்பையும் கைக்கொள்ளுவான். அவன் சரீர இச்சைகளை அடக்கி, மாம்சத்தை சிலுவையில் அறைய அவற்றின் ஆசை இச்சைகளை கட்டுப்படுத்த - அவை எந்த தருணத்திலும் உடைந்து போகாதபடிக்கு பார்த்துக் கொள்ள பிரயாசபடுவான்.

அப்போஸ்தலர்களுக்கு ஆண்டவராகிய இயேசு சொன்னது "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் லௌகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும் நீங்கள்நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" *லூக்.21:34.* அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் போது: "மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்' *1கொரி.9:27.*

ஒரு பரிசுத்தவான் அன்பையும் சகோதர இரக்கத்தையும் பின்பற்றுவான்:- அவன் **'பொற்சட்டமாகிய'** மனிதர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளையே அவர்களுக்குச் செய்யுங்கள் என்பதைப் பின்பற்றுவார்கள். சகோதரருடன் அதிகப் பாசமாகவும் நடந்து கொள்வார்கள். ரோமர் *13:8-ல்* "பிறனிடத்தில் அன்பு கூருகிறவன் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்' என்று வாசிக்கிறோம். அவன் பொய்களையும், அவதூறு, பின்னால் பேசுதல், ஏமாற்றுதல், நேர்மையின்மை போன்ற எந்தத் தீய காரியங்களிலும் ஈடுபடவே மாட்டான். அவனது மார்க்கம் சார்ந்த எல்லாக் கடமைகளையும் இயன்ற மட்டும் அழகாகவும் வசீகரமாகவும் தன்னைச் சுற்றியிருப்பவர்களுக்குக் காண்பிப்பான்.

1கொரிந்தியர் 13-ம் அதிகாரம் என்ன கூறுகிறது? மலைப்பிரசங்கத்திலிருந்து என்ன கற்றுக் கொள்கிறோம்? பேர்க் கிறிஸ்தவர்கள் இவைகளைக் கடைப்பிடிப்பதுண்டா?

ஒரு பரிசுத்தவான் பிறரிடம் இரக்கமும் தயாளசிந்தையுமுடையவனாயிருப்பான். அவன் நாள் முழுவதும் சோம்பலாயிருக்க மாட்டான். தீமை செய்யாமல் மட்டும் இராமல் நன்மை செய்ய முயற்சிப்பான். அவனது நாட்களில் அல்லது தலைமுறையில் பயனுள்ளவனாக வாழப்பிரயாசப்பட்டு தன்னைச் சுற்றிலும் வாழும் மக்களுக்கு ஆவிக்குரிய தேவைகளை சந்திக்க முற்படுவான். தொற்காள் இதற்கு ஒரு சிறந்த உதாரணம். "...அவள் (தொற்காள்) நற்கிரியைகளையும் தானதருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள்" *அப்.9:36.* அவள் அதைப் பிரஸ்தாபப்படுத்த விரும்பவில்லை, ஆனால் செய்து கொண்டு வந்தாள். பவுலுடைய வாழ்க்கையும் ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாயிருக்கிறது. "ஆதலால் நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்பு கூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப் பட்டிருந்தாலும் மிகவும் சந்தோஷமாய் நான்உங்கள் ஆத்துமாக்களுக்காக, செலவு பண்ணவும், செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்" *2கொரி.12:15.*

ஒரு பரிசுத்தவான் இருதய சுத்தத்தைப் பின்பற்றுவான்:- துன் மார்க்கம், ஆவியில் அசுத்தம் ஆகிய வற்றை வெறுத்து, இவற்றிற்குள்தன்னை இழுக்கும் காரியங்களை தவிர்ப்பான். அவனுக்குத் தனது இருதயம் கந்தகக்குச்சு போன்றது என்று அறிவான். சோதனையாகிய தீப்பொறிகள் நெருங்கினால் ஆபத்துவரும். தனது பெலனை யார் நம்ப முடியும்? தாவீதுகூட விழுந்துவிட்டாரே.

ஒரு பரிசுத்தவான் தேவபயத்தைப் பின்பற்றுவான்:- ஒரு அடிமை தண்டனைக்குப் பயந்து எஜமானுக்குப் பயப்படும் பயத்தை நான் குறிப்பிடவில்லை. இது ஒரு குழந்தையின் பயத்தை ஒத்தது. அது தன் தந்தையை நேசிப்பதால் அவருடைய முகத்திற்கு முன்பாகவே வாழ்வதும் அசைவதுமான பயம், அது அன்பு நிறைந்தது.

நெகேமியா எருசலேமின் ஆளுனரான வேளை, தனக்காக யூதர்களிடமிருந்து தேவையான பணத்தைப் பெற்றிருக்கலாம். முந்திய ஆளுனர்கள் அவ்வாறு செய்திருந்தனர். யாரும் அவனைக் குறை சொல்ல முடியாது. ஆனால் அவன் சொல்லுவது என்ன? "எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து அவர்கள் கையிலே அப்பமும் திராட்சரசமும் வாங்கினதும் அல்லாமல், நாற்பது சேக்கல் வெள்ளியும் வாங்கி வந்தார்கள்; அவர்கள் வேலைக்காரர் முதலாய் அதிகாரம் செலுத்தினார்கள்; நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை" நெகே.*5:15.*

ஒரு பரிசுத்தவான் பணிவும் தாழ்மையான மனநிலையுள்ளவன். மற்றவர்களைத் தன்னைவிட உயர்ந்தவர்களாகக் கருதுவான். உலகத்திலுள்ள அனைவரைவிட தன் இருதயத்தில்தான் அதிக தீமை இருப்பதாக எண்ணுவான்.

"நான் தூளும் சாம்பலுமாயிருக்கிறேன்" (ஆதி.18:27) என்று சொன்ன ஆபிரகாமின் உணர்வு அவனுக்குள்ளே இருக்கும்.

மேலும் யாக்கோபு தன்னைக் குறித்து உணர்ந்தது போன்ற "அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல" (ஆதி.32:10).

யோபுவின் உணர்வும் இப்படிப்பட்டதே. அவன் தன்னைக் குறித்து "இதோ நான் நீசன்" என்கிறான் யோபு *40:4.*

பவுல் தன்னைக் குறித்து உணர்ச்சியுடன் "... அவர்களில் பாவிகளில் பிரதான பாவி நான்" *(1தீமோ.1:15)* என்று கூறுகிறார்.

கிறிஸ்துவுக்கு உத்தம இரத்த சாட்சியான ஜான் பிராட்ஃபோர்டு தாம் எழுதும் கடிதங்களின் முடிவில் "மிகவும் பரிதாபமான பாவி. ஜான் பிராட்ஃபோர்டு" என்று குறிப்பிடுவாராம்.

தனது மரணப்படுக்கையிலிருந்த தேவமனிதன் வில்லியம் கிரிம்ஷாவின் இறுதி வார்த்தைகள் "பிரயோஜனமில்லாத பணியாள் இதோ போகிறான்" என்பது.

ஒரு பரிசுத்தவான் தனது எல்லாக் கடமைகளிலும் உறவுகளிலும் உத்தமத்தைக்கடைப்பிடிப்பான்:- தங்கள் ஆத்துமாக்களைக் குறித்த பாரமற்ற வர்களுக்காகப் பாடுபடுவான். பவுலின் இந்த வார்த்தைகள் மறக்கப்படவே கூடாது. "தேவனுக்குப் பயப்படுகிறவர்களாய் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்" கொலோ.*3:23.* "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள், ஆவியிலே அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்' ரோமர்.*12:11.*

பரிசுத்தவான்கள் எதையும் நன்றாகச் செய்வார்கள். அப்படி செய்யாவிட்டால் அதைக்குறித்து வெட்கமடைவார்கள். தானியேலைப் போல, "... அவனுடைய தேவனைப் பற்றிய வேத விஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தரத்தைக் கண்டு பிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப் படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடிக்கக் கூடாது என்றார்கள்" தானி.6:5. அவர்கள் நல்ல கணவன்மாராக, நல்ல மனைவி மாராக, நல்ல பெற்றோராக, நல்ல பிள்ளைகளாக, நல்ல எஜமான்களாக, நல்ல வேலைக்காரராக, நல்ல அயலா ராக, நல்ல நண்பர்களாக, நல்ல குடிமக்க ளாக தனி நிறுவனங்களிலும், பொது வாழ்விலும், தொழிலிலும் எந்தப்பக்கத் திலும் நல்லவர்களாகவே இருப்பார்கள்.

இவ்விதமான கனிகளில்லாத பரிசுத்தம் ஒரு பயனுமில்லாதது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கேட்கும் ஒரு கேள்வி, "மற்றவர்களை விட நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன?"

இறுதியாக ஆயினும் மிகமுக்கிய மாக, பரிசுத்தவான் ஆவிக்குரிய மனநிலையுடையவனாயிருப்பான்:- அவன் பரத்துக்குரிய காரியங்களில் அதிக பற்றுதலுடனும் பூமிக்குரிய காரியங்களில் அதிக பற்றிலில்லாதவ னாகவும் இருப்பான். அவன் தற்போதைய வாழ்வின் காரியங்களில் நிர்விசாரமா யிருப்பதில்லை. ஆனால் எல்லாவற் றிலும் முதலிடம் நித்தியமான உண்மை களுக்காக அவனது மனதிலும் சிந்தனை யிலிருக்கும். அவன் தனது பொக்கிஷம் பரலோகத்தில் இருப்பதால் இந்த உலகத்தில் ஒரு அன்னியனைப் போலவும், பிரயாணியை போலவும், பர தேசியைப் போலவும் காணப்படுவான்.

அவனது சந்தோஷமெல்லாம் ஜெபத்திலே தரித்திருப்பது, வேதம் வாசிப்பது மற்றும் விசுவாசிகளுடன் இணைந்து ஜெபிப்பது ஆகியவை மட்டுமே. அவனுடைய உணர்வு, "**கர்த்தாவே நீரே என் பங்கு**" (சங்.119:57) என்பது தான்.

இத்தகைய குணாதிசயங்கள் ஒரு பரிசுத்தவானில் அடங்கியுள்ளன. இதற் காக நாமும் ஜெபிப்போம். தாங்கள் அடையமுடியாவிட்டாலும், அதற்கு நேராக ஓடினார்கள். அவர்கள் பெற்றுக் கொள்ளாவிட்டாலும் நோக்கிச் சென்றார்கள்.

நான் தைரியமாகவும் உறுதி யாகவும் சொல்வது என்னவெனில் **பரிசுத்தம் ஒரு மகாபெரிய சத்தியம்.** அது ஒரு மனிதனில் இருப்பதைக் காணவும் அறியவும் உணரவும் முடியும்.

அது ஒளி - அது இருந்தால் ஒளி வீசும், **அது உப்பு** - அது இருந்தால் சுவை உணரப்படும், **அது விலையேறப்பெற்ற தைலம்** - அது இருந்தால் அதன் நறுமணம் மறைக்கப்பட முடியாது.

ஒரு **பரிசுத்தவான்** பணிவுள்ளவன். தாழ்மையான மனநிலையுள்ளவன். மற்றவர்களைத் தன்னைவிட உயர்ந்த வர்களாகக் கருதுவான். உலகத்தி லுள்ள அனைவரைவிட தன் இருத யத்தில் தான் அதிக தீமை இருப்பதாக எண்ணுவான்.

கிறிஸ்துவின் மூலம் சுத்திகரிக்கப்படுதல்

Sanctification through Christ

Octavius Winslow (1808 - 1878)

சுத்திகரிக்கப்படுதலில் கிறிஸ்து வின் சாயலை அடைவதற்கான வளர்ச்சி அடங்கும். இதை மிகவும் அழகாக வேத வசனத்தில் தூயஆவியானவர் வெளிப் படுத்தியிருக்கிறார். நமது அருமை இரட்சகரின் உபதேசம் என்னவெனில் "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமா யிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" மத்.11:29. அப்போஸ்தல னாகிய பவுலின் நிருபங்களிலும் இதுவே வெளிப்படுத்தப்படுகிறது. "...தேவன் எவர்களை முன்குறித்திருக்கிறாரோ அவர் களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக் கிறார்" ரோமர் 8:29. "...அன்புடன் சத்தி யத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" எபேசி.4:15.

தேவபிள்ளைகளே, அன்பான ஆண்டவரின் மகிமையான மாதிரியைப் பார்ப்போம். அவர் எவ்வளவு தாழ் மையும் பரிசுத்தமுமானவர்! அவர் ஆவியில் எளிமையுள்ளவர்! இருத யத்தில் தாழ்மையுள்ளவர். இரக்கமும் மனதுருக்கமும் உள்ளவர். பாவங்களை மன்னிக்கிறவர். சுயத்தை வெறுக்கிறவர். ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுப் பவர். பிதாவின் மகிமையை வாஞ்சிப் பவர் மற்றும் மனிதருடைய இரட்சிப்புக் காக ஆவலோடு காத்திருப்பவர். அவரைப் போலாக அவரைப் போல் எல்லாவற்றிலும் வளர வேண்டும். அதை "கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரமாக நடந்து கொள் வதாக" குறிப்பிடலாம் கொலோ.1:10. இது 'நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்த மாயிருக்கிறது' 1தெச.4:3. ஒரு கிறிஸ்த வன்கிறிஸ்துவின்சாயலைப்பெற அவரது மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

கிறிஸ்துவின் பெலன்

ஒரு சமயம் இயேசு தனது சீஷருடன் பேசியதும், இன்று உங்க ளுடன் பேசுவதுமான வார்த்தைகளை ஞாபகப்படுத்திப்பாருங்கள். "... என்னை யல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது" யோ. 15:5. சுயநம்பிக்கை, சுய மனநிறைவு, தற்பெருமை போன்றவை சிலுவையில் அறையப்பட்டு, கிறிஸ்து இயேசுவிலே பெலன் கொள்ளும்போது விசுவாசி பணி செய்ய இடைகட்டிக் கொள்ளுகிறான். நமது ஞானம், பல வீனத்திலும்; தவறு, இயேசுவிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும். இங்குதான் நமது வெற்றியின் மிகப்பெரிய இரகசியம் இருக்கிறது. "... அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பல முள்ளவனாயிருக்கிறேன்" 2 கொரி.12:10. "என் கிருபை உனக்குப் போதும்" 12:9. "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" பிலி.4:13.

கிறிஸ்துவின் வார்த்தை

தேவனுடைய சத்தியம் சுத்தி கரணத்திற்கு மிகப்பெரிய கருவியாயிருக் கிறது. "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம் முடைய வசனமே சத்தியம்" யோ. 17:17. தேவனுடைய சத்தியம் ஆத்துமாவுக்குள் தூயஆவியின் வல்லமையால் கொண்டு வரப்படும்போது அது சுத்திகரிக்கும் வலிமையைப் பெறுகிறது. "கிறிஸ்து வின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமா யிருப்பதாக" கொலோ.3:16. வேதவாக்கி யங்களைக் கற்றுக்கொள்ள ஜாக்கிரதை யோடும் ஜெபத்தோடும் இருப்பீர்களாக.

கிறிஸ்துவின் இரத்தம்

இயேசுவின் பாவநிவாரண இரத்தம் உங்களுக்கு அதிக நெருக்கமா யிருப்பதாக. ஏனெனில் நமக்குள் வாசம்பண்ணும் பாவத்தின் வல்ல மையை மேற்கொள்ளவும், பாவத்தின் குற்ற உணர்வை அகற்றவும் கிறிஸ்துவின் இரத்தம் ஆத்துமாவைக் கழுகவேண்டும். இரத்தம் ஒன்றே போதுமானது. நமது அருமைஇரட்சகராகிய இயேசுவின் மரணத்தின் சிறந்த முடிவு பிசாசின் கிரியைகளை அழிப்பதாகும். பாவம் சாத்தானுடைய மிகப்பயங்கரமான கிரியையாகும். அதை மேற்கொள்ளவும், இதன் வல்லமையை உடைக்கவும், இதன் அதிகாரத்தை கீழ்ப்படுத்தவும், இதன் சீரழிவுகளை பழுது பார்க்கவும் மற்றும் நியாயத்தீர்ப்பிலிருந்து விடு தலை பண்ணவும், ஆசீர்வதிக்கப்பட்ட தேவகுமாரன் சிலுவையில் கோர மரணமடைந்தார். அவ்வேளையில் அவர் அனுபவித்த கசப்பான அனு பவம், மனவியாகுலம், கெத்செமெனே தோட்டத்தில்அவரது ஆத்தும வேதனை, சிலுவையில் அவரது சரீரம் அடைந்த பாடுகள் இவையெல்லாமே நமது பாவங்களுக்காகத்தான். "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங் களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" தீத்து.2:14.

கிறிஸ்துவின் மரணத்திற்கும் பாவத்தின் முடிவுக்கும் நெருங்கிய அழகிய தொடர்பு இருக்கிறது. சகல சுத்திகரிப்பும் சிலுவை மூலமாகவே வருகிறது. எனவே சுத்திகரிப்புக்காக சிலுவையண்டை வாருங்கள். நித்திய ஆவியானவரால் சிலுவை உங்கள் ஆத்துமாவுக்குள் பாவத்தை சாகடிக்கும். எனவே இயேசுவின் சிலுவையண்டை வாருங்கள். எளிய விசுவாசத்துடனும், பாவபாரத்தோடும், சிலுவையண்டை செல்லுங்கள். அங்கு அன்பு ஒன்றே காணப்படுகிறது. அது ஒன்றே உங்களை

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்கிறது. அங்கு பரிசுத்தம் காணப்படுகிறது. இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தம் நம்மை எல்லா பாவத்திலிருந்தும் கழுகி சுத்திகரிக்கும் *1யோவா.1:7.* நீ சிலுவையினடிவாரத்தில் வந்துவிட்டால் சத்துரு உன்னை நெருங்க முடியாது. பாவம் உன்மேல் அதிகாரம் செலுத்தமுடியாது. சாத்தானும் உன்னைக் குற்றப்படுத்த முடியாது.

கிறிஸ்துவின் நிறைவு

இயேசுவிலுள்ள கிருபையின் நிறைவைக் கொண்டு செயல்படுங்கள். கிறிஸ்துவிலுள்ள இந்த கிருபை விசுவாசியை சுத்திகரிக்கும். "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்க.... அவருக்குப் பிரியமாயிற்று" கொலோ.*1:19.* எந்தவிதமான சீர்கேட்டினையும் இயேசுவிடம் கொண்டு வாருங்கள். உடனே அதன் வலிமை குறையும். பாதியளவு வெற்றி கிடைக்கிறது. இந்த ஆசீர்வாதமான மனநிலையும் பரிசுத்த தூண்டுதலும் ஜெபஅறைக்குள் நாம் சென்று, கர்த்தருக்கு முன்பாகப் பணிந்து ஆவியின் தாழ்மையோடும், நொறுங்கிய இருதயத்தோடும், எளிய பாவஅறிக்கையுடனும் விசுவாசத்துடனும் இயேசுவின் பாவநிவாரணத்தின் வல்லமையின் அடிப்படையிலும் வரும்போது நம்மில் வாசம் செய்யும் பாவத்தை மேற்கொள்ள முடியும். உங்கள் ஆத்துமாவுக்கும் தேவனுக்குமிடையில் இடைவெளி வேண்டாம். பாவம் பிரிவினையை ஏற்படுத்தும். ஆனால் பாவம் உடன் அறிக்கையிடப்பட்டு, விட்டுவிடப்பட்டால், தேவனும் ஆத்துமாவும் இனிய பரிசுத்த உறவுக்குள் வந்துவிடலாம்.

"ஆகையால் சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு, இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகாபிரதான ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயம் உள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக் கடவோம்" எபி.*10:19-22.*

கிறிஸ்துவில் வெற்றி

விலையேறப்பெற்ற ஆத்துமாவே! மகிழ்ச்சியாயிரு! சுத்திகரிப்பின் செயலில் உனக்கு விடாமுயற்சியுடன், செயல்பட உற்சாகமுண்டு. 'உன் இரட்சிப்பின் தலைவன்' உனக்காக யுத்தம் செய்து வெற்றி பெற்றுள்ளார். மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். நீ இடைபட்டிருக்கும் போராட்டத்தில் தேவையான பெலனைத் தந்து ஆதரிக்கிறார். எனவே "நல்ல போராட்டத்தைப் போராடு" *1தீமோ.6:12.* "கிறிஸ்து இயேசுவினுள்ள கிருபையில் பலப்படு" *2தீமோ.2:1.* "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் ஜெயம் கொள்" வெளி.*12:11.* "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே, முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" ரோமர்*8:37.*

"சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக; உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" *1தெச.5:23.*

மேரி மான்சன் மற்றும் தேவனுடைய உத்தமம் - பகுதி 4

Marie Monsen and the faithfullness of God - Part 4

Marie Monsen

1929-ம் ஆண்டில் நார்வீஜியன் மிஷனெறி மேரி மான்சன் வட சீனாவின் பெரிய எழுப்புதலில் தேவனால் பயன்படுத்தப்பட்டார். அவர்கள் தேவ கட்டளைப்படி சீன கடற்கரை வழியாகக் கப்பலில் பயணம் செய்தபோது, அக்கப்பல் கடற்கொள்ளையர்களால் கைப்பற்றப்பட்டது. அக்கப்பலில் பிரயாணம் பண்ணினவர்களில் மேரி மட்டுமே மேல்நாட்டை சேர்ந்தவரும் கிறிஸ்தவர்களுமாயிருந்தாள். மற்ற அனைத்து பிரயாணிகளுடைய உடைமைகளும் அவர்களது அறைகளிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டன. மேரி ஒரு சிறு அறையில் சிறுகட்டணத்தில் இரண்டாம் தலைவரால் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள். அது தேவன் கொடுத்த புகலிடம் என்று மேரி நம்பியிருந்தாள். இந்த சம்பவம் தேவமகிமைக்கே ஏதுவானது என அவள் விசுவாசித்தாள். **அவள் வார்த்தைகளைக் கேட்போம்:**

கப்பல் பிரயாணத்தில் ஆண்டவர் ஆச்சரியமாக நடத்தி மல்கியா *3:18* லுள்ள வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். "அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும்துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியம் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்". அக்கப்பலில் நான் மட்டும் பணம் கையில் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்தேன். மறுபடியும் மறுபடியும் என்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என கேட்கப்பட்டது. நானும்சரியாக எவ்வளவு பணம் இருக்கிறதென்று கூறிவிட்டு "நீங்கள் என்னிடமிருந்து அதை எடுக்க முடியாது, என் பிரயாணத்தைத் தொடரடிக்கட்டிற்கு அது வேண்டும்" என்பேன். என்னுடைய சொந்த வார்த்தைகளினால் நான் பணத்தை வைத்திருக்க சம்மதம் பெறவில்லை என்பதை நான் உணர்ந்தேன். அதற்கு ஒரு காரணம் இருந்தது. அதை நாம் மல்கியா *3:18*-ல் பார்த்தோம்.

பலதடவைகள் "நாம் மற்ற எல்லோரிடமுமிருந்து எல்லாவற்றையும் கொள்ளையாடிவிட்டோம். இப்போது நாம் இந்த அயல்நாட்டுப் பெண்ணிடமுள்ள பொருட்களையும் திருடுவோம்" என்று கொள்ளையர்கள் பேசிக்கொள்வதைக் கேட்டேன். சீனப் பெண்மணிகளிடமிருந்து ஆடைகள் பறிக்கப்பட்டன. ஆனால் தேவனை சேவித்த எனக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை. தேவன் வித்தியாசம் காண்பித்தார். ஒரு மெல்லிய அனலான கம்பளி சால்வை ஒன்று என்னிடமிருந்தது. அது கொள்ளையர்களின் கண்களுக்குக் கவர்ச்சியாயிருந்தது. அதை சிலர் எடுத்துக்கொண்டு கதவுவரை செல்வார்கள், திரும்பிவந்து கீழே போட்டுவிட்டுச் செல்வார்கள்.

ஏறக்குறைய பாதிக் கொள்ளையர்களுக்கு எனது கோட் விருப்பமாயிருந்தது. தங்களுக்குச் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பார்கள். அது சரியாக இருந்தால்அமைதியாக எடுத்துக்கொண்டு நழுவி விடுவார்கள். ஆனால் ஒருவரும் கதவுக்கு வெளியே கொண்டு சென்றதில்லை. இதிலும் தேவன் வேறுபாடு காட்டினார்.

அனைத்து சூட்கேசுகளும் துண்டாக்கப்பட்டு கொள்ளையர்களின் கைத்துப்பாக்கிகளுக்கு தோலுறைகளாக மாற்றப்பட்டன. என் சூட்கேசுகள் தொடப்படவில்லை. எனக்கு மூன்று சூட்கேசுகள் இருந்தன. இரண்டு உறுதியான சிறிய சூட்கேசுகளும் ஒரு பெரிய விலை குறைந்த சூட்கேசும் இருந்தன. அந்தப் பெரிய சூட்கேஸ் உண்மையான தோலினால் செய்யப்பட்டதா என்று கொள்ளையர்கள் கேட்டுக்கொண்டேயிருந்தனர். ஆனால் சிறியவற்றை அவர்கள் கேட்கவில்லை. அதிலும் ஒரு வேறுபாட்டினை தேவன் காண்பித்தார்.

சில நாட்களுக்குப் பின்பு கப்பல் முழுவதும் சுகாதாரக் குறைவு ஏற்பட்டது. குடிநீர் குடிக்க முடியாத நிலையிலிருந்தது. ஏதாவது நான் செய்ய வேண்டும், ஆனால் நான் சொல்லுவதை கவனிப்பார்களா? "தம்முடைய தூதர்களை காற்றுகளாக ..... செய்கிறார்" *(சங்.104:4)* என்ற வசனம் நினைவுக்கு வந்தது. ஆம் இந்தக் கொள்ளையர்களைக் கூட எனது வேலைக்காரர்களாக ஆக்க என் தேவனால் கூடும். இது ஜெபத்தில் அதிக நம்பிக்கை தந்தது. நான் ஏதாவது ஒரு பெரிய மனிதரிடத்தில் பேச விரும்பினேன். சற்று காற்று வாங்க எனது அறைக்கு வெளியே நான் நின்று கொண்டிருந்தபோது முக்கிய கொள்ளையனும் அதற்கு அடுத்தவனும் ஒப்பியம் அறைக்கு வந்தனர். அவர்களிடம் கப்பற் தலைவன் எங்கே என்று நான் கேட்டபோது அவர்கள் அவர் தமது அறைக்குள் இருப்பதாகக் கூறினர். எனவே அவர்கள் அவரைப் பூட்டி வைத்தார்களா? என்று கேட்டபோது அப்படித்தான் என்றார்கள்.

"ஏன் கப்பலாட்கள் வேலை செய்யவில்லை என்பது எனக்குத் தெரிகிறது. இதே கப்பலில் நாம் அனை

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் தங்கியிருக்க வேண்டியதாயிருக்கிறது. கப்பலின் தளங்கள் தண்ணீரால் சுத்தப்படுத்தப்பட்டு துடைக்கப்பட வேண்டும். இவ்விதமான கப்பல்களில் எப்போதுமே அவ்வாறு செய்யப்படுவதுண்டு"

அவர்கள் கண்கள் தளத்தைப் பார்த்துவிட்டு என்னையும் நோக்கின. "உங்கள் விருப்பத்தின்படியே ஆகட்டும்" என்றான். ஒரு கொள்ளையன் ஓடி வந்தான் "போதகர்" (மேரி மான்சன்) சொன்னது உத்தரவாக அவனுக்குச் சொல்லப்பட்டது. கப்பலாட்கள் கட்டளை பெற்றனர். கப்பலாட்கள் தங்கள் கடமைகளைச் செய்தனர். வாழ்க்கை ஒரு பெரிய சந்தோஷத்தைப் பெற்றது.

கப்பலில் குடிநீர் கண்டு பிடிக்கப் பட்டது. எனது வேண்டுகோளின்படி காற்றுக்காகவும் உடற்பயிற்சிக்காகவும் பிரயாணிகள் மேல் தளத்திற்கு முறைப்படி வர அனுமதிக்கப்பட்டனர். பக்க வாட்டு பெரிய கதவுகள் திறக்கப்பட்டு கைதிகள் தாராளமாகக் காற்றைப் பெற்றுக்கொள்ள வசதிசெய்யப்பட்டது. சூடு அதிகரித்த போது பந்தல் போடப் பட்டு நிழலைப் பெற அனுமதி கொடுக்கப்பட்டது.

"நீங்கள்தான் இந்தக் கப்பலில் கட்டளை பிறப்பிக்கிறவர்களாயிருக்கிறீர்கள் என்று கேள்விப்படுகிறேன்". இது நாங்கள் விடுதலை பெற்றபின் கப்பல் மாலுமியின் கூற்று: எல்லாப் பிரயாணிகளும் தங்கள் நன்றிகளைத் தெரிவிக்க தளத்தில் கூடினார்கள். "நன்றி, நன்றி, கப்பலின் சூழ்நிலைகள் மாற நீங்கள்தான் காரணம்" என அனைவரும் கூறினர்.

தீயதிட்டங்கள் ஒன்றுமில்லாமற் போகும்

கடைசி ஐந்து நாட்கள் கொள்ளையர்கள் தொடர்ந்து எப்படி என்னைக் கப்பலிலிருந்து கொண்டு போவது என விவாதித்தனர். விரைவில் அவர்கள் கப்பலைவிட்டு வெளியேற வேண்டும். நதிமுகத்துவாரத்திற்கு வெளியே பெரிய துப்பாக்கி வள்ளங்கள் நின்றன. என்னை அவ்வாறு எடுத்துச் செல்ல ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. (என்னிடம் பணயத்தொகை அதிகமாக வாங்க அவர்கள் காத்திருந்தனர்).

ஏறக்குறைய ஐம்பது ஜங்கர்கள் எங்கள் கப்பலுக்கருகில் கட்டப்பட்டிருந்தன. கொள்ளையர்களின் படுக்கைகளும் உணவும் ஏற்கெனவே இவற்றிற்கு மாற்றப்பட்டுவிட்டன. நாங்களும் பிற்பகல் மூன்று மணிக்கு கப்பலைவிட்டு வெளியேறவேண்டும். அவர்கள் என்னை எப்படித் தூக்கிச்செல்வது எங்கே தூக்கிச் செல்வது என விவாதித்துக் கொண்டிருந்தனர். அந்த நாளில் இரு அற்புதமான வாக்குத்தத்தங்கள் உயிரோட்டமான நிஜங்களாக மாறின. "மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து ... உமது கூடாரத்திலே ஒளித்து வைத்துக் காப்பாற்றுகிறீர்" (சங்.31:20) மற்றும் "பராக்கிரமன் கையிலிருந்து கொள்ளைப் பொருளைப் பறிக்கக்கூடுமோ? அல்லது நீதியாய்ச் சிறைப்பட்டுப் போனவர்களை விடுவிக்கக் கூடுமோ? என்றாலும் இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்தப் பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள். பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும். உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளுவேன்" ஏசா.49: 24,25. அந்த நேரத்திலிருந்து நான்துணிந்து கொள்ளையர்களிடம் அவர்கள் என்னை ஒரு போதும் தூக்கிச்செல்ல முடியாது என்றும், அதை தேவன் சொல்லியிருக்கிறார் என்றும் சொல்ல ஆரம்பித்தேன்.

எந்த மணி நேரத்தில் அவர்கள் செல்ல இருந்தார்களோ, அந்த வேளையில் ஒரு புயல் எழும்பியது. ஒரு பலத்த சுழல்காற்று கப்பலைச் சுற்றிலும் சீறியது. புயல் கடந்து சென்றதும் ஒப்பியம் புகைக்கும் நேரம் சமீபித்து விட்டது. எனவே ஒன்றும் நடக்காமற் போய்விட்டது.

அடுத்தநாளும் இதேசமயம் நாங்கள் விடைபெறும் நேரமாயிற்று. ஆனால் சில ஒற்றர்கள் வெளியிலிருந்து திரும்பி வந்தனர். தூரத்திலே நீண்டநேர உரத்தகுரலில் விவாதம் நடந்தது. அவர்கள் ஒத்துக்கொள்ளாத ஏதோ நடந்து விட்டது. மறுபடியும் ஒப்பியம் புகைக்கும் நேரம் வந்துவிட்டபடியால் எதுவும் நடைபெற முடியவில்லை.

நாங்கள் விடுதலையாக்கப்படுவதற்கு முந்தினநாள் மூன்றாவது முறையாக வெளியேற அக்கொள்ளையர்கள் ஆயத்தமாயினர். ஒருவனுக்கு கட்டளை கொடுக்கப்பட்டதை நான் கேட்டேன்; "ஒன்று அந்த அயல்நாட்டுப் பெண்ணிடம் ஜங்கில் ஏறிக் கொள்ளச் சொல், அப்போது நாம் போய் விடலாம்".

நான் எனது பதுங்கு குழியிலிருந்து குதித்தேன். கொள்ளையனுடைய காலடிகள் என் அறையை நெருங்கியதை மறக்கவே முடியாது. "ஆண்டவரே, இப்போது நீர் என்ன செய்யப்போகிறீர்?" என்றேன். கதவு முரட்டுத்தனமாகத் திறக்கப்பட்டது. நானும் கொள்ளையனும் முகத்திற்கு முகம் முறைத்துப் பார்த்தோம். அந்த வேளை எனது வாழ்க்கையில் மிகவும் நீண்ட நேரமாயிருந்தது.

வாசற்படியை அவன் தாண்டவில்லை. ஒரு வார்த்தையும் பேசாமல் கதவை அறைந்துவிட்டு போய் விட்டான். "நீ என்ன வேண்டுமானாலும் எனக்குச் செய், நான் அவளிடம் இன்னொருமுறை ஏமாற முடியாது என்று சொல்" என்று அவன் சொல்லக் கேட்டேன். ஒற்றர்களிடமிருந்து சில முக்கிய அறிக்கைகள் வந்துள்ளன. எனவே அதிக விவாதங்கள் நடந்தன. எப்படியும் அதன்பிறகு எதுவுமே அன்று நடக்கவில்லை.

அன்று ஒரு விசேஷித்த மாலைப் பொழுது. எதிர்பாராதவிதமாக கொள்ளையர்களோடு இரண்டு மூன்று மணிநேர சந்திப்பு ஏற்பட்டது. வார்த்தைகளும் பெலனும் எனக்குக் கொடுக்கப் பட்டன. தேவ ஆவியானவரின் பிரசன்னத்தை நான் உணர்ந்தேன். வசனம் இருதயத்திற்குள் இடமளிக்கப்படும் போது ஏற்படும் அமைதி ஏற்பட்டது. அந்தக் கொள்ளையர்கள் தங்களைத் தாங்களே கண்டுகொண்ட நாள் அது.

"நாங்கள் கெட்டவர்கள், உண்மையாகவே கெட்டவர்கள். நாங்கள் காலையிலிருந்து இரவுவரை தீமை செய்கிறோம். நீங்கள் நன்மையாகப் பிறந்திருக்கிறீர்கள். நீங்கள் எங்களை வெறுக்கவில்லை. வேறு எல்லோருமே எங்களை வெறுக்கிறார்கள்" என்று அவர்கள் தங்களை உணர்ந்து பேசினார்கள். அவர்களிடம் அவர்களைப் போலவே தீமையில் நானும் பிறந்தாலும் இயேசுகிறிஸ்து நம்மை இரட்சிக்க வந்து, நமக்குப் புதிய இருதயத்தைத் தந்தார் என்று கூறி மகிழ்ந்தேன். அந்த மாலைப் பொழுதை அவர்கள் மறக்கவே மாட்டார்கள்.

(தொடரும்)

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு :

- நமது **ஜெபங்கள்** கர்த்தர் நம்மை அவரால் நிரப்பி, அவரது பங்காளிகளாக செயல்பட பரிசுத்தத்தில் தொடர ஜெபிப்போம்.
- நீ **சிலுவை**யினடிவாரத்தில் வந்து விட்டால் சத்துரு உன்னை நெருங்க முடியாது. பாவம் உன்மேல் அதிகாரம் செலுத்தமுடியாது. சாத்தானும் உன்னைக் குற்றப்படுத்த முடியாது.
- கனிகளில்லாத **பரிசுத்தம்** ஒரு பயனுமில்லாதது.
- **கர்த்தருக்கு** முன்பாகப் பணிந்து ஆவியின் தாழ்மையோடும், நொறுங்கிய இருதயத்தோடும், எளிய பாவ அறிக்கையுடனும் விசுவாசத்துடனும் இயேசுவின் பாவநிவாரணத்தின் வல்லமையின் அடிப்படையிலும் வரும்போது நம்மில் வாசம் செய்யும் பாவத்தை மேற்கொள்ள முடியும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason